செ.வெ.எண்.228 நாள்:06.04.2018

திருநெல்வேலியில் துப்புரவு தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு (மகளிர்களுக்கு) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தில் தையல் பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

----

திருநெல்வேலி பாளையங்கோட்டை மகாராஜா நகர் பகுதியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தில் நீயூ- விங்ஸ் திட்டத்தின் கீழ் துப்புரவு தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு (மகளிர்களுக்கு) இலவச தையல் பயிற்சி வழங்கும் முகாம் தொடக்க நிகழ்ச்சி இன்று (06.04.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு இலவச தையல் பயிற்சியை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் துப்புரவு தொழிலாளர்களின் குடும்பத்தினரின் வாழ்வாதாரத்தை உயர்திடும் நீயூ விங்ஸ் திட்டம் ஜனவரி 26ம் தேதி தொடங்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் துப்புரவு தொழிலாளர்களின் அடுத்த தலைமுறையினருக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி வாழ்வாதாரத்தை உயர்திடவும், கல்வி பயில தேவையான உதவிகள் செய்திடவும், மருத்துவ முகாம் மற்றும் மருத்துவ சிகிச்சைகள் செய்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் துப்புரவு தொழிலாளர்களுக்கு தனியாக நல வாரியம் உள்ளது. நல வாரியத்தில் அனைவரும் பதிவு செய்து அரசின் நலத்திட்டங்களை பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 4200 துப்புரவு தொழிலாளர் குடும்பங்கள் உள்ளது. சுமார் 15 ஆயிரம் துப்புரவு தொழிலாளர் குடும்ப உறுப்பினர்கள் உள்ளனர்.

துப்புரவு தொழிலாளர் குடும்ப உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தேவையான பல்வேறு திறன் வளர்ப்பு பயிற்சிகள் மற்றும் உதவிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இன்றைய தினம் 36 நபர்களுக்கு இலவச தையல் பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சி முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுதரவும் முயற்சி மேற்கொள்ளப்படும். மேலும் சுயமாக தொழில் செய்யவும் தேவையான உதவிகள் செய்யப்படும். இந்த வாய்ப்பை பயன்படுத்தி சிறப்பாக பயிற்சி பெற்று வாழ்க்கை தரத்தினை உயர்த்தி கொள்ள வேண்டும். என பேசினார்.

தொடர்ந்து துப்புரவு தொழிலாளர் குடும்பத்தினரிடம் இலவச தையல் பயிற்சிக்கான விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., மாநகராட்சி நல அலுவலர் திரு.பொற்செல்வன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் திரு.ராஜ்குமார், முன்னோடி வங்கி மேலாளர் திரு.கஜேந்திரநாதன், கிராம சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குநர் திரு.இளங்கோ, பயிற்சியாளர் திரு.தினதாயளன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.